**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 108 of 2024

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : கார்த்தி

Father's Name : த/பெ.பழனிச்சாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of May** 2026.

**(எதிரிகள் ஆஜர். 1 ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 2,3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

அரசு தரப்பில் முதல்விசாரணை

1. நான் திருப்பூர் மாவட்டம் செந்தேவி பாளையத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2023 ஆம் தேதி இரவு சுமார் 09.30 மணி அளவில் சோமனூரில் உள்ள சந்தைக்கு நான் பணி செய்த கம்பெனியின் மற்றொரு கிளையான ஊஞ்சபாளையத்திலிருந்து செல்லும் வழியில் சந்தை இருந்ததால் வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்காக நானும் எங்கள் நிறுவனத்தில் வேலை செய்த மலைச்சாமி என்பவரும் எங்கள் கம்பெனிக்கு சொந்தமான e-bike வெளியே நிறுத்திவிட்டு மீண்டும் சந்தைக்கு சென்று வந்து பார்த்தபொழுது மேற்படி நாங்கள் நிறுத்திவைத்த இடத்தில் எங்கள் நிறுவனத்தின் இருசக்கர வாகனம் காணவில்லை. நாங்கள் அக்கம் பக்கம் விசாரித்து தேடிப் பார்த்தும் வாகனம் காணவில்லை. அன்றைய தினம் நான் என்னுடைய கம்பெனிக்கு சென்று விட்டேன். மறுநாள் காலை 08.30 மணிக்கு கருமத்தம்பட்டி காவல் நிலையம் வந்து எனது

கம்பெனியின் இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்பந்தமாக நான் எழுத்து மூலமான புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரியில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் புகார் **அ.சா.ஆ** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மதியம் காவல் நிலையத்திலிருந்து எனக்கு அழைத்து என்னுடைய கம்பெனியின் வாகனம் கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள் நான் காவல் நிலையம் சென்று வாகனத்தை அடையாளம் காண்பித்தேன். அப்பொழுது வண்டியின் சாவியும் என்னிடம் தான் இருந்தது. எதிரிகளையும் போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். பின்னர் நான் நீதிமன்றத்தில் மனுசெய்து கம்பெனியின் வாகனத்தை பெற்றுக் கொண்டேன். புகைப்படத்தில் உள்ள வாகனம் எங்கள் கம்பெனிக்கு சொந்தமான வாகனம்தான். மேற்படி வாகனத்தைதான் நான் பெற்றுச் சென்றேன். புகைப்படத்தில் உள்ள வாகனம் P.M.O.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கே.எம்.கே டெக்ஸ்டைல்ஸ் தான் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்திலிருந்து எத்தனை மணிக்கு நான் கிளம்பினேன் என்றால் இரவு சுமார் 08.30 மணி அளவில் கிளம்பினேன். மேற்படி ஊஞ்சபாளையத்தில் உள்ள கம்பெனிக்கும் நான் பணி செய்த கம்பெனிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் ஆறு கிலோமீட்டர் இருக்கும். நான் ஊஞ்சபாளையத்தில் உள்ள மற்றொரு கிளைக்கு சென்று பார்த்ததாக சொல்லி உட அங்கிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் சுமார் 20 நிமிடத்திற்குள் கிளம்பினேன். இரவு சுமார் 9 மணிக்கு கிளம்பி இருப்பேன். நான் இருசக்கர வாகனத்தை நிறுத்தியதாக சொல்லப்படும் இடம் அருகே என்னைப் போன்று பல இருசக்கர வாகனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான்.

2. நான் பொருட்கள் வாங்கிக் கொண்டு மீண்டும் வந்து பார்த்த பொழுது எனது இருசக்கர வாகனம் காணவில்லை என்றால் சரிதான். சந்தைக்கும் கருமத்தம்பட்டி காவல் நிலையத்திற்கும் சுமார் 4 கிலோ மீட்டர் இருக்கும். நான் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் மறுநாள் வீட்டிலிருந்து நேரடியாக காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். மேற்படி எங்கள் நிறுவனத்தின் வாகனம் காணாமல் போனது சம்பந்தமாக எங்கள் நிறுவனத்திற்கு எந்த ஒரு தகவலும் சொன்னதாக நான் அளித்த புகாரில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த பொழுதும் மேற்படி எங்கள் கம்பெனியின் வாகனம் திருடு போனது சம்பந்தமாக கம்பெனிக்கு சொன்னதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். E-bike வாகனத்திற்கு GPS பொருத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஆனால் நான் எடுத்துச் சென்ற வாகனத்திற்கு GPS வசதிகள் எதுவும் இல்லை. சாவி போடாமல் மேற்படி இ-பைக் வாகனத்தை தள்ளினால் அலாரம் அடிக்கும் என்றால் அந்த மாதிரி

அதுபோல் எந்த அலாரமும் அடிக்காது.

3. நான் புகார் அளித்து சுமார் ஒரு மணி நேரத்திற்குள் போலீசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டார்கள். அன்றைய தினமே போலீசார் எனது கம்பெனியின் வாகனம் கிடைத்து விட்டதாக சுமார் 3 மணியளவில் தகவல் சொன்னார்கள். நான் காவல் நிலையத்திலிருந்து இருசக்கர வாகனத்தை அன்றைய தினமே எடுத்துச் சென்று விட்டேன் என்றால் சாட்சி முதலில் எடுத்துச் சென்று விட்டதாக கூறினார் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து எடுத்துச் சென்றதாக கூறுகிறார். எனது வாகனம் காணாமல் போனதற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

(**Sd**/- **T**. **Arunkumar**)

**Signature of Witness**

**Judicial Magistrate**,

**Sulur**